FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

Under Section 173 BNSS

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்ற.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8101936

1. District : The Nilgiris PS: V & AC Year: 2026 FIR No.: 7 Date: 03.11.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: amended by PC Sections பிரிவுகள்: 7 (a)

(iii) Act சட்டம்: (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : October. Date to : 02.11.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் 2026 3rd நாள் வரை

Time Period : Time from : Week Time to : 12.30 hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time : 03.11.2026.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time : 08.00 AM.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Tamil Typed complaint.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Bickatty-1 village Office
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 30 kms South.

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : V. Vasanth (b) Father's/ ~~Husband's~~ Name : B. Virjananthan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / ~~கணவர்~~ பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Tourist (g) Address : D. No. 1/236. Near Canara Bank
தொழில் முகவரி Nadukatty. Yedakad. The Nilgiris.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Uma Priya. Village Administrative Officer, Bickatty-1 village. Kundah Taluk. The Nilgiris District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

---

* GCP 240-34(Type 2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவுபோன / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவுபோன / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the investigation / Refused investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
J. Prasanth 03/11/2026

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
03-11-2026

15. Date & Time of despatch to the court: 03.11.2026
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 10.15 hrs.

Name: Quut G.Shanmugavadivu.
Rank: நிலை .....No. எண் .....
Insp. of Police
VEAC, The Nilgiris.

..... Continuation of Column No.12 of FIR in Cr.No.7/2026/AC/NI, dt.03.11.2026

Honoured Sir,

On 03.11.2026 at about 08.00hrs one Tr.V.Vasanth, age 46, S/o B.Virjananthan, Door No.1/236, Near Canara Bank, Naduhatty, Yedakad, the Nilgiris District appeared before me and gave a written complaint, which runs as follows:

உதகமண்டலம்,
03.11.2026.

அனுப்புநர்

V.வசந்த், வயது 46,
த/பெ B.விர்ஜானந்தன்,
கதவு எண்.1/236,
கனரா வங்கி அருகில்,
நடுஹட்டி,
எடக்காடு,
நீலகிரி மாவட்டம்.

பெறுநர்

காவல் ஆய்வாளர் அவர்கள்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நீலகிரி.

அம்மையீர்,

1907-ம் வருடம் எடக்காடு, நடுஹட்டி கிராமத்தில் எனது கொள்ளு தாத்தா கிளவ செவனன் என்பவர் பெயரில் புல எண்.58-ல் ஓட்டு வீடு ஒன்று இருந்தது. அது முதற்கொண்டு நாங்கள் 4 தலைமுறையாக அங்கு வசித்து வருகிறோம். இந்த இடமானது குந்தா தாலுக்கா, பிக்கட்டி-1 கிராமத்திற்கு உட்பட்டதாகும். 1907-ம் வருட ஆவணத்தை தவிர வேறு ஆவணம் எதுவுமில்லை.

அந்த இடத்தில் எனது தாத்தா திரு.பெள்ளிக்கி கவுடர் அவர்கள் நெடுஞ்சாலைத்துறை தார் சாலை அமைப்பதற்கு முன்பாகவே காங்கிரீட்டால் ஆன மூன்று வீடுகளை கட்டியிருந்தார். தற்பொழுது அந்த இடத்தின் சர்வே எண்கள்.245/14A மற்றும் 245/13 ஆகும்.

அந்த சர்வே எண்கள்.245/14A மற்றும் 245/13-ல் 3.5 சென்ட் பரப்பளவு கொண்ட கட்டிடத்துடன் கூடிய இடத்தை எனது அப்பா திரு.விர்ஜானந்தன் பெயரில் சொத்து வரி விதிப்பு எண்.457-ன்படி பிக்கட்டி பேரூராட்சியால் வரி விதிக்கப்பட்டு அந்த இடத்தில் நான் குடும்பத்துடன் வசித்து வருகிறேன்.

தற்பொழுது அந்த வீட்டை எனது அப்பா எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார். அதனை பத்திர பதிவு செய்ய வேண்டும் என்றால் என்னுடைய பெயரில் பட்டா மாற்றம் செய்ய வேண்டும். எனவே, நான் எனது தந்தை எழுதிக்கொடுத்த ஆவணம் மற்றும் F&B வரைபடத்துடன் குந்தா தாலுக்கா, பிக்கட்டி-1 கிராமத்தை சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர் திருமதி.உமா பிரியா அவர்களை அக்டோபர் மாதம் 3-ம் வாரத்தில் ஒருநாள் சந்தித்து, மேற்படி சர்வே எண்ணில் உள்ள மற்ற நபர்களின் பெயர்களை சிட்டாவிலிருந்து நீக்கி எனது தந்தை விர்ஜானந்தன், பெரியப்பா ராமகிருஷ்ணன் மற்றும் நடராஜ் ஆகியோர் பெயர்களை மட்டும் சிட்டாவில் இணைத்து வழங்குமாறும், எனது பெரியப்பா இருவரும் இறந்துவிட்டார்கள் என்றும் சொன்னேன். அதற்கு அவர் பெரியப்பா இருவரின் வாரிசு சான்றிதழை கொடுக்குமாறும், அவ்வாறு மற்ற நபர்களின் பெயர்களை சிட்டாவிலிருந்து நீக்கி எனது தந்தை விர்ஜானந்தன், பெரியப்பா ராமகிருஷ்ணன் மற்றும் நடராஜ் ஆகியோர் பெயர்களை மட்டும் சிட்டாவில் சேர்க்க நிறைய செலவாகும் என்று சொன்னார். நான் எவ்வளவு செலவாகும் மேடம் என்று கேட்டதற்கு ரூ.1,50,000/- வரை செலவாகும் என்றும், தனக்கு லஞ்சமாக பணம் கொடுத்தால் தான் பட்டாவில் பெயர் சேர்க்க பரிந்துரைத்து உயர் அதிகாரிக்கு அன்னுப்புவேன் என்றும், இது தொடர்பாக எதாவது சந்தேகம் இருந்தால் கேட்கும்படி கூறி தன்னுடைய தொலைபேசி எண்.77086 63579-ஐ கொடுத்தார். மேலும் என்னுடைய தொலைபேசி எண்.90479 917204-ம் வாங்கி வைத்துக்கொண்டார். நான் பதில் எதுவும் சொல்லாமல் வந்துவிட்டேன்.

அதன்பிறகு 28.10.2026-ம் தேதி இரண்டு மூன்று முறை அவர் எனக்கு மிஸ்டு கால் கொடுத்தார். நான் திரும்பி பேசியபோது அவர் என்ன ஆயிற்று நான் கேட்ட பணத்தை தயார் செய்து விட்டீர்களா என்று என்னிடம்

கேட்டார். நான் தெரிந்தவர்களிடம் கேட்டு பார்த்து ரெடி செய்துவிட்டு சொல்கிறென் என்று சொன்னேன். அதன்பிறகு அவர்

30.10.2026-ம் தேதி அவர் மிஸ்டுகால் கொடுத்து நான் பேசியபோது அவர் கடைசியாக தனக்கு ரூ.1,25,000/- லஞ்சமாக பணம் கொடுக்க வேண்டும் அப்பொழுதுதான் என்னுடைய விண்ணப்பத்தை மேலதிகாரிக்கு பரிந்துரைப்பேன் என்று கூறினார். மேலும் எனது பெயரில் பட்டா தொடர்பாக ஆன்லைனில் அப்ளே செய்துவிட்டு, தன்னை வந்து பார்க்கும்படி கூறினார்.

நான் 31.10.2026-ம் தேதி ஆன்லைனில் எனது பெயரில் பட்டா மாற்றம் செய்ய மனு எண்.2026/0103/11/010869-ன்படி விண்ணப்பம் செய்துவிட்டு, 02.11.2026-ம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு பிக்கட்டி கிராமத்தில் உள்ள பிக்கட்டி-1 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு சென்று திருமதி.உமா பிரியா அவர்களை சந்தித்தேன்.

அப்பொழுது அவர் எனது ஆன்லைன் விண்ணப்பம் தனக்கு கிடைத்துவிட்டதாகவும், பட்டா பெயர் மாற்றம் செய்ய பரிந்துரைக்க வேண்டும் என்றால், தான் முன்பு கூறியதுபோல, தனக்கு லஞ்சமாக பணம் ரூ.1,25,000/-ஐ வேண்டும் என்றும், பணத்தை 03.11.2026-ம் தேதிக்குள் ரெடி செய்துவிட்டு தன்னை தொலைபேசியில் அழைக்கும்படி கூறினார். தவறும் பட்சத்தில் எனது பட்டா விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்று கண்டிப்புடன் கூறினார்.

குந்தா தாலுக்கா, பிக்கட்டி-1 கிராம நிர்வாக அலுவலர் திருமதி.உமா பிரியா என்பவர் லஞ்சமாக கேட்ட ரூ.1,25,000/-ஐ கொடுத்து நாங்கள் பரம்பரைபரம்பரையாக வாழும் எனது மூதாதையருக்கு சொந்தமான இடத்தை எனது பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய எனக்கு விருப்பம் இல்லை.

எனவே, என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.1,25,000/-ஐ கேட்ட குந்தா தாலுக்கா, பிக்கட்டி-1 கிராம நிர்வாக அலுவலர் திருமதி.உமா பிரியா என்பவர் மீது நடவடிக்கை எடுக்க புகார் மனுவுடன் அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.1,25,000/-, 2) இணையவழி பட்டா மாறுதலுக்கான விண்ணப்பத்தின் நகல், 3) நில உரிமைச் சான்றின் நகல், 4) 1907-ம் ஆண்டிற்கான ஆவண

நகல், 5) Affidavit, 6) வரைபடத்தின் நகல், 7) கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழின் நகல், 8) பெள்ளக்கி கவுடர் அவர்களின் இறப்பு சான்றிதழின் நகல் மற்றும் 9) பிக்கட்டி பேரூராட்சி சொத்துவரி விதிப்பு ரசீதின் நகல் ஆகியவற்றை தங்களிடம் ஆஜர் செய்கிறேன். அவர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Honoured Sir, Received the above complaint on 03.11.2026 at 08.00hrs, A discreet enquiry was caused against Tmt.Uma Priya, Village Administrative Officer, Bickatty-1 Village, Kundah Taluk, the Nilgiris District and confirmed about the corrupt activities and also verified the bonafide of the complainant. After getting orders from Superior Officer, registered a case in Cr.No.7/2026/AC/NI U/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 dated:03.11.2026 at 10.00hrs and took up the investigation. The original FIR along with the complaint given by the complainant are submitted to the concerned Hon'ble Court.

03-11-2026

(G.SHANMUGAVADIVU)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
the Nilgiris.